மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

03.08.2022 புதன்கிழமை    supeedsam.com    supeedsam@gmail.com

## பல வருட காலமாக தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு

# அரசியல் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேண்டியமை அத்தியாவசியமான விடயங்களில் ஒன்று

பல வருட காலமாக தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேண்டியமை அத்தியாவசியமான விடயங்களில் ஒன்றாகும் என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹ, யுத்தத்தின் மூலம் பாதிக்கப்பட்ட அந்த மக்கள் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் பலவற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறினார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை இன்று (03) ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிடடார்.. அம்மக்களின் தீர்க்க வேண்டிய காணிப் பிரச்சினைகள் பல உள்ளன. வடக்கின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக நாம் புதிதாக சிந்திக்க வேண்டியுள்ளது. வெளிநாடுகளில் வாழுகின்ற இலங்கை தமிழ் மக்களுடன் நெருங்கிச் செயற்பட்டு, இலங்கையினை மீளக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்திற்கு அவர்களது ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கும் நாம் எதிர்பார்க்கின்றோம் என்றும் ஜனாதிபதி மேலும் கூறினார். பாராளுமன்ற மேற்பார்வைக் குழுக்களை உடனடியாக நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். .அந்த குழுக்கள் ஊடாகவும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஒன்றாக இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புக் கிட்டும். சாதாரண சமூகமொன்றிற்கான தேசிய இயக்கம் இது தொடர்பாக சமர்ப்பித்த அறிக்கையினை நான் ஏற்கனவே இச்சபையில் சமர்ப்பித்துள்ளேன்.அவ்வாறே அரசியல் கட்சித் தலைவர்களை உள்ளடக்கிய தேசிய சபை ஒன்றினை நிறுவுவதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். முன்னெடுக்கும் நோக்கில் அனைவரினதும் ஆகக் குறைந்த பொது இணக்கப்பாடொன்றுடன் கூடிய வேலைத்திட்டம் ஒன்றினை இந்த தேசிய சபையின் ஊடாக தயாரித்துக்கொள்ள எம்மால் முடியும். பேதங்கள் மூலம் எமது நாடு முற்காலம் தொட்டு பின்னடைவுகளுக்கு உள்ளானது. நாம் இன ரீதியாக பிரிந்தோம், மொழி ரீதியாக பிரிந்தோம், சமய ரீதியாக பிரிந்தோம். கட்சி ரீதியாக பிரிந்தோம். வகுப்பு ரீதியாக பிரிந்தோம், பூகோள ரீதியாகவும் பிரிந்தோம்



## கொவிட் பரவினாலும் பாடசாலைகள் மீள மூடப்படாது



கொரோனா தொற்று பரவினாலும் பாடசாலைகள் மீள மூடப்படாது எனவும் கல்வி அமைச்சச் ர் சுசில் பிரேமஜயந்த் தெரிவித்துள்ளார். மாணவரொருவர் கொவிட் தொற்றுக்கு உள்ளானால், அவருடன் தொடர்பில் இருந்தவர்களை தனிமைப்படுத்திவிட்டு ,கற்பித்தல் செயற்பாடுகளை தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், பாடசாலை நடத்தும் விதம் தொடர்பான ஆலோசனைகள் அடங்கிய வழிகாட்டல்கள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியிடப்படும் என்றார்.

## இந்தியா இலங்கைக்கு உணவுக் கப்பலை அனுப்பி உதவிக் கொண்டிருக்க, சீனா தனது உளவுக்கப்பலை அனுப்பி இந்தியா மீது கழுகுப்பார்வை மேற்கொள்ள விரும்புகிறது

**மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பா.உ ஜி.ஶ்ரீநேசன்**

(வவுணதீவு நிருபர்)



சீனாவின் விஸ்தரிப்பு தந்திரோபாயம் இந்தியாவையும் வீழ்த்துமா? இல்லை,இந்தியா தனது தந்திரோபாயக்கல் மூலமாக இந்தியா ஈழவர் பாதுகாப்பு என்னும்

02 ஆம் பக்கத்தில்...

## ராஜபக்ஸ நிழல் அரசாங்கத்தின் புதிய முகம்



"ராஜபக்ஸ நிழல் அரசாங்கம்" தற்போது அரச வன்முறையையும் அரச மிலேச்சத்தனத்தையும் பயன்படுத்தி மக்களை அச்சமூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். ஜனநாயகத்தை சிதைக்கும் புதிய வடிவத்தை சமூகத்தில் உருவாக்க அரசாங்கம் செயற்பட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இதற்கு எதிராக நாம் வலுவாக முன் நிற்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## வரவு செலவு திட்ட திருத்த மசோதா ஆகஸ்ட் 9ல் முன்வைப்பு

வரவு செலவு திட்ட திருத்த மசோதா 2022 (இடைக்கால வரவு செலவு திட்டம்) ஆகஸ்ட் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 22 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை ஆகஸ்ட் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இன்று இடம்பெற்ற கட்சி தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## டீசல் கப்பலுக்கான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது

டீசல் கப்பலுக்கான கட்டணத்தை நேற்று வழங்கியுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். இந்நிலையில் இன்று டீசல் கப்பலில் இருந்து இறக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என மைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். மற்றுமொரு பெட்ரோல் கப்பலுக்கும் டீசல் கப்பலுக்குமான முன்பணம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் எரிசக்தி அமைச்சர் உறுதிப்படுத்தினார். இதேவேளை, இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் விமான எரிபொருளை வழங்குவதற்கான ஒரு வருட கால ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளது. அதன்படி, முதல் ஜெட் எரிபொருள் கப்பல் 12 மற்றும் 14 ஆம் திகதிக்கு இடையில் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ரணிலுக்கு வாக்களித்த கறுப்பாடுகளை கண்டுபிடிங்கள் இன்றேல் 10 பேரும் ராஜினாமா செய்யுங்கள்

**இ.த.அ.கட்சி மூத்த உறுப்பினர் அரசரெத்தினம் ஆவேசம்**

[ காரைதீவு நிருபர் சகா]



கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து ரணிலுக்கு வாக்களித்ததாக கூறப்படும் கறுப்பாடுகளை உடனடியாக கண்டுபிடியுங்கள். இது கட்சிக்கும் மக்களுக்கும் செய்த துரோகம். முடியாவிட்டால் நீங்கள் 10 பேரும் ராஜினாமா செய்யுங்கள்.இவ்வாறு காரைதீவில் இடம்பெற்ற

02 ஆம் பக்கத்தில்...

## நுவரெலியா மாவட்டத்தில் 161 குடும்பங்களுக்கு பாதிப்பு

**தலவாக்கலை பி.கேதீஸ்**

நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா, கொத்மலை மற்றும் அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவுகளில் 161 குடும்பங்களைச் சேர்ந்த 80 பேர் நேற்று (02) நண்பகல் வரை இடம்பெயர்ந்துள்ளனர். சீரற்ற காலநிலை மற்றும் வெள்ளம் காரணமாக இந்தப் பிரதேச செயலகப் பிரிவுகளில் மூவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காணாமல் போயுள்ளதாகவும் நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் தெரிவித்துள்ளார். அந்தவகையில் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில் 148 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேரும், கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேரும், அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரும் இடம்பெயர்ந்துள்ளனர். மண்சரிவு, கற்பாறை சரிவு, வெள்ளம், மரங்கள் உடைந்து முறிதல் போன்ற அனர்த்தங்களினால் சிலர் உயிரிழந்தும், காணாமலும்,

02 ஆம் பக்கத்தில்...

## கல்வி பொது தராதர உயர் தர பரீட்சை பெறுபேறுகள் இம்மாத இறுதிக்குள் வெளியீடு



கல்வி பொது தராதர உயர் தர பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கும் 30 ஆம் திகதிக்கும் இடையில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார். பெறுபேறுகளை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

## ஜனாதிபதியின் அழைப்புக்கு மக்கள் காங்கிரஸ் சாதகமான பதில்

நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழலில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து, பொதுவான வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுவதற்குஜனாதிபதியினால் விடுக்கப்பட்ட அழைப்புக்கு சாதகமான பதிலை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வழங்கியுள்ளதாக, கட்சியின் செயலாளர் எஸ்.சுபைர்தீன் தெரிவித்துள்ளார்.

## ரணிலுக்கு வாக்களித்த கறுப்பாடுகளை கண்டுபிடிங்கள்

இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் கல்முனையைச் சேர்ந்த மூத்த உறுப்பினர் அ.அரசரெத்தினம் ஆவேசமாக கூறினார். தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், த. கலையரசன் ,தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் உட்பட பல்வேறு பிரமுகர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார் . மேலும் அவர் கூறுகையில்.. ஜனாதிபதி தெரிவு தொடர்பான தமிழ் தேசிய கூட்டமைப்பு கூட்டத்தில் அனைவரும் அதாவது 10 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏகமனதாக டளசுக்கு வாக்களிப்பது என்று நீங்கள் முடிவு எடுத்ததாக கூறுகிறீர்கள் .ஆனால் தேர்தலுக்கு பின்னர் ஒருசிலர் ரணிலுக்கு வாக்களித்ததாக தகவல்கள் வந்திருக்கின்றன.. உடனடியாக அவர்களை கண்டுபிடிக்க வேண்டும் .ஏனெனில் இது தொடர்ந்தால் எதிர்காலத்தில் ரகசியமாக எந்தவிதமான தீர்மானமும் எடுக்க முடியாமல் போய்விடும். இந்திய அரசாங்கம் சொல்லி ரணிலுக்கு வாக்களித்தது என்று யாராவது சொன்னால் நீங்கள் டளசுடன் செய்த ஒப்பந்தம் பிரயோசனமில்லை. அதுமட்டுமல்ல மற்றும் ஒரு கேள்வி .கட்சி அனைத்தும் சேர்ந்து டளசுக்குக்கு வாக்களிக்குமாறு நீங்கள் தீர்மானம் எடுத்ததாக கூறினீர்கள். இது கட்சியின் முடிவா? அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களின் முடிவா?

ஏனென்றால் 75 வருட ஜனநாயக அரசியல் ஈடுபட்ட தமிழரசி கட்சி இப்படியான ஒரு தவறான முடிவை எடுத்திருக்கின்றது .அது கட்சியை அவமானத்திற்கு உட்படுத்தி இருக்கிறது என்று தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா அறிக்கை வெளியிட்டார்.

அப்படியானால் தலைவருக்கு தெரியாமல் இந்த முடிவு எடுக்கப்பட்டதா?

தெரியப்படுத்தினால் நன்றாக இருக்கும். என்றார். பதிலளித்த சுமந்திரன்...

ஜனாதிபதி தெரிவு தொடர்பாக தமிழரசுக் கட்சி மட்டத்திலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்திலும் பல்வேறு கூட்டங்களை நடத்தினோம். தமிழரசு கட்சி கூட்டங்களுக்கு எல்லாம் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு அழைப்பு கொடுத்தோம். ஆனால் எரிபொருள் பிரச்சனை காரணமாக மற்றும் சூம் இணைப்பில் இணைந்து கொண்ட முடியாமை காரணமாகவும் அவரது பங்குபற்றுதல் இல்லாமல் இருந்தது. ஆனால் அனைத்து தீர்மானங்களும் அவருக்கு கூறப்பட்டு வந்தது. அடுத்தது எமது பாராளுமன்ற உறுப்பினர் 10 பேரில் ஆறு பேர் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் மீதி நான்கு பேர் பங்காளி கட்சி உறுப்பினர்கள். அனைவரும் ஏகமனதாக இணைந்து டளசிக்கு வாக்களிப்பதாக முடிவு எடுத்தோம் .அதன்படியே செயல்பட்டோம். யாராவது மாறி வாக்களித்து இருக்கிறார்கள் என்று நான் கருதவில்லை. என்றார்.

## ராஜபக்ஸ நிழல் அரசாங்கத்தின் புதிய முகம்

ஜனநாயகத்திற்காக முன்நிற்கும் சிவில் சமூகம் வழியில் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதாகவும், அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். இவ்வாறான நிலையில் சட்டத்தரணிகளுக்கு பாரிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டின் குடிமக்களின் வாழ்வுரிமைக்காக அவர்கள் வழங்கி வரும் ஒத்துழைப்புக்கு தனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார். ஜனநாயகம் மற்றும் சமூக நீதிக்கான தேசிய மக்கள் பேரவையுடன் இணைந்ததான சட்டத்தரணிகளுடன் இன்று (02) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அடக்குமுறை மூலம்,மக்களுக்கு அரசாங்கம் சொல்லும் செய்தி, போராட்டம் மேற்கொள்ளாது “அதிலிருந்து கவனமாக இருங்கள் என்பதா?” எனவும்,மக்களை எதிர்ப்பதன் மூலம் போராட்டங்களை நிறுத்துங்கள் என்பதே அரசின் செய்தியா? எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார். கருத்தொன்றைக் கொண்டிருப்பதும். கருத்தொன்றை வெளிப்படுத்துவதுமான ஜனநாயக ரீதியிலான பேச்சுரிமை பறிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை அரசாங்கம் வழங்க முயல்கிறதா எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார். இந்நாட்டின் சட்டத்தரணிகள் சமூகம் போலவே அனைத்து பொறுப்புள்ள குடிமக்களும் கூட அரசாங்கத்தின் இந்த வன்முறைக்கு எதிராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# மலையகத்தில் பல வீதிகள் மண்சரிவால் பாதிப்பு

**தலவாக்கலை பி.கேதீஸ்**

மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக நேற்று (03) பல்வேறு இடங்களில் மண்சரிவுகள் இடம்பெற்றமையால் மலையகத்தில் பிரதான வீதிகள் பல மண்சரிவால் மூடப்பட்டுள்ளதாக நுவரெலியா அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் தெரிவித்தார். நுவரெலியா ஹட்டன் வீதியில் நானுஓயா பிளக்பூல் பகுதியிலும், ஹட்டன் கண்டி வீதி பகதுலுவ பகுதியிலும், ஹப்புகஸ்தலாவ நாவலப்பிட்டி வீதியில் ஹபுகஸ்தலாவ பகுதியிலும், தலவாக்கலை நாவலப்பிட்டி வீதியில் கடியன்லேன பகுதியிலும் இவ்வாறு மண்சரிவினால் வீதிகள் மூடப்பட்டுள்ளன. இவ்வீதிகளில் விழுந்து கிடக்கும் மண்மேடுகள் மற்றும் கற்பாறைகளை அகற்றும் பணி தற்போது இடம்பெற்று வருவதாகவும், இவ்வீதிகளை பயன்படுத்தும்போது வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறும் கேட்டுக்கொள்வதோடு தற்போது வீசும் கடும் காற்றினால் மரங்கள் சாய்ந்து விழும் அபாயம் உள்ளதால் மரங்கள் அதிகமாக காணப்படும் வீதிகளிலும் மரங்களுக்கு அடியிலும் வாகனங்களை நிறுத்துவதை தவிர்க்குமாறும் வாகன சாரதிகளிடமும் மற்றும் உரிமையாளர்களிடமும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## நுவரெலியா மாவட்டத்தில் ...

இடம்பெயர்ந்தும் உள்ளனர். அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரிவுகளில் ஒரு வீடு முழுமையாகவும் 12 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. இடம்பெயர்ந்த மக்கள் தற்போது உறவினர் வீடுகளிலும் பாதுகாப்பான இடங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். சிலர் பாதிக்கப்பட்ட இடங்களை விட்டு செல்லாமல் அதே இடங்களிலும் உள்ளனர். நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொடவின் பணிப்புரைக்கிணங்க அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான வசதிகள் மற்றும் நிவாரணங்களை வழங்க நுவரெலியா, கொத்மலை மற்றும் அம்பகமுவ பிரதேச செயலாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இந்தியா இலங்கைக்கு உணவுக் கப்பலை அனுப்பி உதவிக் கொண்டிருக்க, சீனா தனது உளவுக்கப்பலை

இரு மாங்காய்களை வீழ்த்துமா? என்பதுதான் எமது கேள்வியாகும்.ஆனால் இந்தியா உட்பட ஈழத்தமிழர்கள் மலையகத்தமிழர்கள் பாதுகாக்காப்பட வேண்டும் என்பதே ஈழத்தமிழர்களின் வேண்டுதலாகும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார், அவரால் செவ்வாய்கிழமை (02ம் திகதி) ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த அறிக்கையிலேயே இதனை குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் அவர் குறிப்பிடுகையில்,

தெற்காசியாவில் சீனா வலுவாகக் காலூன்றுவதற்கு ஒரேயொரு சவாலாக இருப்பது இந்தியா மட்டுமேதான் என்பதை அறிவோம். இந்தியாவைச் சுற்றிய முத்துமாலை வியூகம், பட்டுப்பாதை அமைப்பு, கடன்வலைகளில் நாடுகளை வீழ்த்தி அவற்றைக் கையகப்படுத்தல் என்கின்ற உபாயங்களை சீனா கையாண்டு வருகின்றது. மேலும் ஈழத்தமிழருக்குப் பாதுகாப்பாகவும் இந்துசமுத்திரத்தில் இந்தியாவுக்கு எதிரான சக்திகள் நுழையாமலும் கவசமாக இருந்த விடுதலைப் புலிகளின் பலத்தை அழித்தமை என்கின்ற செயற்பாடுகள் மூலமாக தனது தந்திரோபாயங்களை மேற்கொண்ட சீனா யாழ்ப்பாணம் பருத்தித்துறை, இந்துசமுத்திரத்தில் இராமர் அணைவரை சென்று இந்தியா மீது அவதானிப்புகளை மேற்கொண்டது. தற்போதைய நிலையில் இந்தியா இலங்கைக்கு உணவுக் கப்பல்களை அனுப்பி உதவிகள் செய்து கொண்டிருக்க, சீனா தனது நாட்டு உளவுக்கப்பலை அம்பாந்தோட்டடைத் துறைமுகம்வரை அனுப்பி இந்தியா மீது கழுகுப்பார்வை மேற்கொள்ள விரும்புகிறது.

அந்தவகையில் சீனாவின் மூலோபாயம் என்பது இந்தியாவின் பலத்தினை இயன்றவரை சிதைத்து பலவீனப்படுத்துவதும், அதன் எதிர்கால வல்லரசுக்கனவை இல்லாதொழிப்பதுமாகும். மேலும் இந்தியாவின் எல்லைப்பிரதேசங்கள் சிலவற்றைக் கைப்பற்றி இந்தியாவை நிரந்தரமாய் நெருங்கி அவதானிப்பதும் சீனாவின் திட்டமாக இருக்கலாம். இலங்கையில் கால்பதித்த வண்ணம் இந்தியாவை அவதானிப்பது நெருக்குதல்களை ஏற்படுத்துவது சீனாவுக்கு இலகுவான விடயமாகும். அதற்கான தந்திரோபாயங்கள் ஒவ்வொன்றையும் சீனா இலங்கையைப் பயன்படுத்திக் கச்சிதமாகச் செய்துள்ளது.

1)இந்தியாவுக்கும் ஈழத்திற்குமான பாதுகாப்புக் கவசமாக இருந்த விடுதலைப்புலிகளின் பலத்தை இலங்கையோடும் பலநாடுகளோடும் இணைந்து சீனா அழித்துள்ளது. இந்தக்கவசத்தை அழிப்பதில் இந்தியாவின் சோனியா தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கம் பங்களித்தமை ஆச்சரியமானதும் வேதனைக்குரியதுமான விடயமாகும்.

2) இலங்கைக்கு வருவாயளிக்காத அம்பாந்தோட்டைத் துறைமுகம்,மத்தளை விமான நிலையம் என்பவற்றை அமைத்துக்கொடுத்து இலங்கையை நிரந்தரக்கடனுக்குள் சீனா சிக்க வைத்துள்ளது.

3) வருமானம் இல்லாமலும், பாரிய கடன்சுமையாலும் தள்ளாடி விழுந்த இலங்கை அரசிடம் இருந்து அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை நீண்டகாலக்குத்தகைக்கு (99ஆண்டுகள்) சீனா கையகப்படுத்தியுள்ளது.

4) தனக்கு உரித்தாக்கப்பட்ட அம்பநாந்தோட்டைத்துறைமுகத்திற்கு உளவுக்கப்பலை சீனா அனுப்பியுள்ளது.

5) 3500 கி.மீ தொலைவுக்கு அப்பால் இருந்து இந்தியாவை அவதானித்த சீனா சில கி.மீ இடைவெளியில் இருந்து இந்தியாவை அவதானிக்கும் பாக்கியத்தை இலங்கை வழங்கியுள்ளது.

6)நிரந்தரமாக இந்தியாவுக்கு அண்மையில் தங்குவதற்காக போட்சிற்றரி என்னும் சீனாவுக்கான தீவையும் இலங்கை அரசு வழங்கியுள்ளது.

மொத்தத்தில் சீனா தனது தந்திரோபாய நகர்வுகளை மூலோபாயத்தை அடையத்தக் விதத்தில் கச்சிதமாக நகர்த்தியுள்ளது. இனியாவது இந்தியா தனது நிலையான பாதுகாப்புக்கான மூலோபாயத்தினை பல தந்திரோபாயாங்கள் ஊடாக வகுக்க வேண்டியுள்ளது. குறிப்பாக தற்போது இந்தியாவில் உறுதியான ஆட்சியினை இரண்டு தடவைகளுக்கும் மேலாக பரிபாலிக்கின்ற பாரதீய ஜனதாக்கட்சி அரசாங்கம் உறுதியான தீர்மானத்தினை எடுக்க வேண்டும். அந்தத் தீர்மானமானது இந்தியாவின் பாதுகாப்பையும் ஈழத்தமிழர்களின் பாதுகாப்பையும் இணைக்கும் உறுதியான திட்டமாக அமையவேண்டும்.வடக்கு கிழக்கு கடல் பிரதேசங்களோடு தமிழர்களின் பாதுகாப்பையும் இந்தியாவினால் உறுதி செய்ய வேண்டும். தமிழர்களின் சுயநிருணயம் தன்னாட்சி உரிமையைப் பேணுவற்கான தீர்வினை அடைவதற்கு இந்தியா வழிசமைக்க வேண்டும். இறுதியாக, சீனாவின் ஆதிக்கம் எமது உறவு நாடான இந்தியாவையும் வீழ்த்துமா? இல்லை,இந்தியா தனது தந்திரோபாயத்தால் இந்தியா ஈழவர் பாதுகாப்பு என்னும் இரு மாங்காய்களை வீழ்த்துமா? என்பதுதான் எமது கேள்வியாகும். ஆனால் இந்தியா உட்பட ஈழத்தமிழர்கள் மலையகத்தமிழர்கள் பாதுகாக்காப்பட வேண்டும் என்பதே ஈழத்தமிழர்களின் வேண்டுதலாகும். இந்தியா அறிவியல் தந்திரத்தாலும் ஆன்மீக மந்திரத்தாலும் சக்தி பெறவேண்டும் அந்த சக்தி என்பது இலங்கைத்தமிழர்களின் உரிமைகளோடு பின்னிப்பிணைந்ததாக அமையவேண்டும் என்பதுதான் உண்மை. இவைகளையெல்லாம் இனியாவது இந்தியா உணரவேண்டும். என குறிப்பபிட்டுள்ளார்.

# 100 நாட்கள் செயல்முனைவு மக்கள் குரல் இன்று திருகோணமலையில்



**(அ . அச்சுதன்)**

“வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்” எனும் 100 நாட்கள் செயல்முனைவின் மூன்றாம் நாள் போராட்டம் (03.08.2022) புதன் கிழமை இன்று திருகோணமலை மாவட்டத்தில் ஆனந்தபுரி விளையாட்டு மைதானத்தில் இன்று நடைபெற்றுள்ளது இப் போராட்டத்தில் திருகோணமலை மாவட்டத்தினைச் சேர்ந்த மக்கள், சிவில் அமைப்பினர், பெண்கள் அமைப்பினர், செயற்பாட்டாளர் என 150 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனக் கோரி நடைபவணியாக வருகைதந்து மைதானத்தில் கூடியிருந்து தங்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர். அத்துடன் அடுத்தகட்ட போராட்டமானது முல்லைத்தீவு மாவட்டத்தில் கரத்துரை பற்றில் நாளை (04.08.2022) வியாழக் கிழமை காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது.



“தேனாட்டில் கதிர்காமம் என புகழ்ந்து கூறும்
தாந்தாமலை சென்று சண்முகனை வழிபட்டால்
அல்லல்போம், தொல்வினைபோம் ஆன
செல்வமத்தனையும் இன்பமுடன் பெற்று இனிது வாழ்வாரே”

அனைத்து விதமான ஆலய வெண்கலப்பொருட்கள், வீட்டுக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்

குணா மல்ரி சொப் மற்றும் உமா பென்சி ஹவுஸ்
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை



# தாந்தாமலை அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய

# வருடாந்த மகோற்சவப் பெருவிழா -2022

## திருக்கொடியேற்றம்
## 22.07.2022 வெள்ளிக்கிழமை

## தீர்த்தோற்சவம்
## 12.08.2022 வெள்ளிக்கிழமை

இலங்கை திருநாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் கிழக்கு மாகாணத்தில் மீனனிங்கள் கவிபாடும் மட்டக்களப்பில் வந்தோரை வாவென்று அழைக்கும் மக்கள் வாழ்கின்ற தேசம் படுவான்கரையில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஒரு எல்லையிலும் அம்பாரை மாவட்டத்திற்கு அயலிலும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இருந்து 10மைல் கல் தொலைவில் காடும் காடுசார்ந்த பிரதேசமும், மலையும் மலைசார்ந்த பிரதேசமும், வயலும் வயல் சார்ந்த பிரதேச நிலமும் சூழ அமையப்பெற்றுள்ள இடமே தாந்தாமலை அங்கு எழுந்தருளி அருள் மழை சொரியும் முருகப் பெருமானின் கோயில் வரலாறு தொன்மை வாய்ந்தது. இவ்வாலயத்தின் வரலாறு கூத்திகன் – சேனன், உலகநாச்சி, ஆடகசௌந்தரி, குளக்கோட்டன், ஆகியோருடன் தொடர்பு பட்டு நிற்பதை வரலாற்றுச் சான்றுகளும், கர்ணபரம்பரைகதைகளும் சான்று பகிர்கின்றது. ஆதியில் ஆதிதிராவிடர்களின் மரவழிபாட்டுடன் தொடர்புடையதாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் வழிபாடும் திறந்த வெளிக்கோயிலாக தாந்தாமலையும் இருந்ததாக கர்ண பரம்பரைகதைகளூடாக அறியமுடிகின்றது. தாந்தாமலையின் உச்சியில் சிலந்தி மரம் ஒன்றும் அதனடியில் பிள்ளையார் ஒன்றும் இருந்தன என்பதை அறியக்கூடியதாகவுள்ளதோடு கதிர்காம க்ஷத்திரியர்களின் வழிபாட்டு தலமாக தாந்தாமலை இருந்துள்ளது. ஆடகசௌந்தரி ஆட்சி காலத்தில் தாந்தாமலை ஆலயத்தை தரிசித்ததாகவும் மாளிகை அமைத்து தங்கியும் இருந்ததாகவும் கர்ண பரம்பரை கதைகள் கூறுகின்றது இதற்குச் சான்றாக இன்றும் இரசதானி அமைந்திருந்த தடயங்களும் கற்றூண்களும் மற்றும் சிற்பவேலைப்பாடுகள் சிதைந்து அழிந்த கற்களும் காணக்கிடக்கின்றன. இப்பிரதேசம் மலையும் மலைசார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமுமாக உள்ளதால் அதிகளவான மக்கள் மழையை நம்பி விவசாயம் செய்கின்றனர் அதனடிப்படையில் மழை இல்லாத காலத்தில் மலைப்பிள்ளையாருக்கு பொங்கல் வைத்து பூசை செய்தால் மழை பொழிந்து இன்புற்ற வரலாறுகள் உள்ளதுடன் அது இன்றும் வழக்கத்தில் உள்ளதை காணமுடிகின்றது.

## 22.07.2022ம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக கிராம ரீதியான திருவிழாக்கள் நடைபெறும்

## 12.08.2022ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5மணிக்கு எம்பெருமானுக்குரிய புண்ணிய தீர்த்தோற்சவம் நடைபெறும்



விளம்பர அனுசரணையாளர் : சோமசுந்தரம் சுரேஸ் (முனைக்காடு)

# திருமலையில் இலங்கை வங்கியின் சிறப்பு நிகழ்வு





**(அ . அச்சுதன்)**

இலங்கை வங்கியின் 83 வருடகால அர்ப்பணிப்புமிக்க சேவைப் பயணத்தில் இணைந்திருந்த வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவிக்கும் நிகழ்வு இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண உதவி பொது முகாமையாளர் ட சிந்தியா மார்டின் அம்மணியின் தலைமையில் திருகோணமலை மேற்தர கிளையில் சிறப்பாக திங்கட்கிழமை இடம் பெற்றது. ஓய்வு நிலை வங்கி முகாமையாளர் திரு. நடராசா மகேந்திரன் , வாடிக்கையாளர் சார்பில் வைத்திய கலாநிதி திரு கௌரீஸ்வரன் ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தினர். 18+ கணக்கின் பல்கலைக்கழக மாணவர்களுக்கான செல்வி குமணன் சிந்தூரணி , செல்வி சாரங்கா, செல்வி அன்ரனி லுக்சிகா புலமை பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன் ஓய்வு நிலை வங்கி அதிகாரிகளுக்கும் உதவி பொது முகாமையாளரினால் நினைவு பரிசில்களும் வழங்கப்பட்டது.

# கட்டகாமத்தில் இராணுவத்தினரின் அன்னதானம்





**( காரைதீவு நிருபர் சகா)**

கதிர்காமகாட்டு பாதையில் இறுதி கட்ட நுழைவாயில் இருக்கின்ற கட்டகாமத்தில் இலங்கை ராணுவத்தினர் பாத யாத்திரிகர்களுக்கு தொடர்ச்சியாக அன்னதானம் வழங்கி வருகின்றார்கள். ஆயிரக்கணக்கான பாதயாத்திரீகர்கள் பசியாறி வருகின்றார்கள். இராணுவ வீரர்களே சுகாதார முறைப்படி உணவு விநியோக சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். அடியார்கள் நீண்ட வரிசையில் நின்று அன்னதானத்தில் பங்கேற்று வருகின்றார்கள்.

# அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பான பல ஆவனங்கள் கையளிப்பு



**பைஷல் இஸ்மாயில்**

அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பில் சமூக ஆர்வலர்கள் இணைந்து கிழக்கு மாகாண ஆளுநருக்கு வழங்கிய முறைப்பாட்டிற்கமைவாக, அது தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கூட்டுறவுத் திணைக்கள மாகாண ஆணையாளருக்கு ஆளுநர் பணிப்புரை வழங்கியிருந்தார். அதற்கமைவாக, மாகாண ஆணையாளரினால் குறித்த விடயம் தொடர்பான விசாரணைகளைநடாத்துவதற்குஒருகுழுநியமிக்கப்பட்டு அவ்விடயம் தொடர்பில் முறைப்பாட்டாளர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. முறைப்பாட்டாளர்கள் தங்களது முறைப்பாடுகளை வழங்கியுள்ளதுடன் அதற்கு மேலதிகமாக இன்னும் பல ஆவணங்களை சமூக ஆர்வலர்களான அஸ்வர் ஷாலி, எம்.ரீ.ஹானிம், யூ.எல்.நிசார் உள்ளிட்ட பலர் கூட்டுறவு அபிவிருத்தி பிராந்திய அலுவலகத்திற்குச் சென்று பிரதம கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.பரீடிடம் கையளித்து வைத்தனர்.

# கிழக்கு மாகாணத்தில் திணைக்களத் தலைவர்கள் சிலருக்கு இடமாற்றம்



**நூருள் ஹுதா உமர்**

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அவர்களின் பணிப்புரைக்கு அமைய மாகாணத்தில் நீண்டகாலமாக ஒரே பதவியில் கடமையாற்றிய சில திணைக்களத் தலைவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். நீண்ட காலமாக ஒரே நிறுவனத்தில் பணிபுரிந்ததாலும், அந்த பதவிகள் தொடர்பான தகுதிகளை பூர்த்தி செய்யாததாலும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை கருத்தில் கொண்டு, மாகாண பிரதம செயலாளர் துசித பீ. வணிகசிங்க அவர்களிற்கு ஆளுநர் அறிவுரை வழங்கினார். அதற்கமைய, மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளராக கடமையாற்றிய திருமதி.ஆர்.வளர்மதி மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய திரு.என்.சிவலிங்கம் மாகாண கூட்டுறவு திணைக்கள ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மாகாண கூட்டுறவு ஆணையாளராக கடமையாற்றிய ஏ.எல்.எம். அஸ்மி கல்முனை மாநகர ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மாகாண கலாசார பணிப்பாளராக கடமையாற்றிய திரு.எஸ்.நவநீதன் மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் காப்புறுதி சேவைகள் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளராக பணியாற்றிய திருமதி.எஸ்.சரணியா மாகாண கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை, மாகாண கூட்டுறவுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராகப் பணியாற்றிய திரு. ஏ.ஜி. தேவேந்திரன்மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளராக கடமையாற்றிய திரு.கே.இளந்துடுதன் மாகாண கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் மாகாண பிரதம செயலாளர் துசித பீ. வணிகசிங்க தலைமையில் வழங்கப்பட்டது. புதிதாக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் நேற்று (02) காலை திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தை சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

# அடையாளப்படுத்தப்படாத இடங்களில் தயவு செய்து குப்பை கொட்டாதீர்கள் மூதூர் சுகாதார வைத்திய காரியாலயம் அறிவிப்பு

**(எப்.முபாரக்)**

மூதூர் சுகாதார பிரிவிற்குற்பட்ட "பராமறிப்பட்ட" அரச∴தனியார் காணிகளில் 'இரவு' நேரங்களில் குப்பைகளை கொட்டும் நடவடிக்கைகளில் "ஒரு சிலர் தொடர்ந்தும்" ஈடுபடுவதை எம்மால் அவதானிக்கமுடிகின்றது. இவ்வாறு கொட்டப்படும் கழிவுகளால் "பல்வேறு சுகாதார சீர்கேடுகள்" ஏற்பட வாய்ப்புள்ளதால்,இதை தடுக்கவேண்டிய சமூகப்பொறுப்பு நம் அணைவருக்கும் உண்டு ஆளனி,தொழிநுட்பம்(CCTV) மற்றும் இயந்திர வசதிகள் போதியளவு இல்லாத எமது பிரதேசத்தில் இவ்வாறான செயற்பாடுகளை 'சீர்படுத்துவதில்' பாரிய சிக்கல்கள்களை எதிர்நோக்கவேண்டி வரும் என்பதையும் நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

மக்களின் ஒத்துழைப்புடன் இச்சவால்களை வெற்றிகொள்வது சம்பந்தமாக நேற்று (02-08-2022) மூதூர் பிரதேச சபை தவிசாளர்,மூதூர் பிரதேச செயலாளர்,ஏடிபி (யுனீ)மூதூர் பிரதேச சபை செயலாளர்,பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ,மூதூர் பிரதேச கிராம சேவகர்களுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. இதன்போது கழிவுகளை முறையாக அகற்றுவதற்கான செயற்பாடுகள் சம்பந்தமாகவும்,மக்களுக்கு விழிப்பூட்டுதலின் அவசியம் சம்பந்தமாகவும் ஆலோசிக்கப்பட்டது. மூதூர் பிரதேச சபை,மூதார் பிரதேச செயலகத்துடன் இனைந்து மூதூர் எம்.ஓ எச் மேற்கொள்ளும் இந்நடவடிக்கைகளுக்கு "பொதுமக்கள் அனைவரும்" ஒத்துழைப்பு வழங்குமாறு பனிவாய் வேண்டுகின்றோம் என மூதூர் சுகாதார வைத்திய காரியாலயத்தினால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதன் போது குப்பைகள் கிடக்கும் இடங்களையும் மூதூர் வைத்திய அத்தியட்சகர்,மூதூர் பிரதேச சபை தவிசாளர், மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சென்று பார்வையிட்டார்கள்.

# ஏறாவூர் பொதுச் சந்தையில் கடைகளைக் கொண்டிருந்தோரை அடையாளம் காண்பதற்கான முன்னெடுப்புக்கள்

**(ரக்ஸனா)**



ஏறாவூர் பொதுச் சந்தையில் கடைகளைக் கொண்டிருந்தோரை அடையாளம் காண்பதற்கான முன்னெடுப்புக்கள். ஏறாவூர் நகர சபைக்குரிய பொதுச் சந்தையில் 1987ஆம் ஆண்டு வாக்கில் இறுதியாக கடைகளைக் கொண்டிருந்த பொதுச் சந்தை வியாபாரிகளை அடையாளம் காணும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக விடயத்திற்கென நியமிக்கப்பட்ட ஏறாவூர் நகர சபைக் குழு தெரிவித்துள்ளது. தற்போது தூர்ந்து சிதைவடைந்து போய்க் கிடக்கும் ஏறாவூர் நகர சபைக்குரிய பொதுச் சந்தையை நவீனமயப்படுத்தி மீளத் துவங்குவதற்கான முயற்சியாக இந்த நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. இந்த சந்தை கிழக்கில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக 1987ஆம் ஆண்டுக்குப் பின்னர் இயங்கவில்லை. அதனடிப்படையில் இந்த சந்தை கடைசியாக இயங்கியபோது அங்கு கடைகளைக் கொண்டிருந்த சந்தை வியாபாரிகளை அடையாளம் காணும் முதற்கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தாம் கடைகளைக் கொண்டிருந்தமைக்கான ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு சந்தை வியாபாரிகள் 93 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் இதுவரை 31 வியாபாரிகள் விடயத்திற்கென நியமிக்கப்பட்ட ஏறாவூர் நகர சபைக் குழுவினரிடம் முன்னிலையாகியதாக அக்குழு தெரிவித்துள்ளது. மேலும் 61 பேர் ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளனர். ஏனையோர் அறிவிக்கப்பட்ட தினங்களில் முன்னிலையாகுவர் என தாம் எதிர்பார்ப்பதாகவும் குழுவினர் தெரிவிக்கின்றனர்.பொதுச் சந்தை வியாபாரிகளை அடையாளம் காணும் விடயத்திற்கென நியமிக்கப்பட்ட ஏறாவூர் நகர சபைக் குழுவில் மாகாண சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் என். ஐங்கரன், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. ஹாறூன், வருமானப் பரிசோதகர் என். வாஹித், நகர சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப். பாத்திமா ஸப்ரினா உட்பட நான்கு நகர சபை உறுப்பினர்களும் இடம்பெற்றிருக்கின்றனர்.

# பயங்கரவாத தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்படவேண்டும்

**க.ருத்திரன்**

'பயங்கரவாத தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்படவேண்டும் ஏராளமான கைதிகள் இன்னும் சிறையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள் புதிய ஜனாதிபதியாக இருக்கின்ற கௌரவ ரணில் விக்கிரமசிங்க இவ்விடயத்தில் கூடுதல் கவனமெடுக்கவேண்டும" என்று தமிழ் உணர்வாளர் அமைப்பு வேண்டுகோள் விடுப்பதாக மேற்படி அமைப்பின் தலைவர் க.மோகன் தெரிவித்தார்.

நேற்று மாலை சமகால அரசியல் தொடர்பாக மக்களுக்கு கருத்து தெரிவிக்கும் முகமாக அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ் வேண்டுகோளினை விடுத்தார்.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் அதேவேளை தமிழ் தேசிய கூட்டமைப்பு அண்மையில் நாடு தோறும் கிராமங்கள் தோறும் சென்று பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டிருந்தது. அதற்கு பின்பு என்ன நடந்தது என்று எமக்கு தெரியாது.எனவே இது சார்ந்து தமிழ் மக்கள் நலன் கொண்ட அனைத்து அரசியல் சக்திகளும் இந்த விடயத்தில் அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் எல்லோரும் ஒருமித்த குரல் கொடுப்பதுதான் தமிழ் உணர்வாளர் அமைப்பின் முக்கியகோரிக்கையாக இருக்கின்றது என்றார்.

# கல்வி அமைச்சரிடம் முறையிடத் தீர்மானம்

**( மட்டக்களப்பு நிருபர்)**



கிழக்கு மாகாணத்தில் உள்ள சில பாடசாலைகள் கல்வியமைச்சின் தீர்மானத்தை மீறிச் செயற்படுவது கண்டனத்திற்குரியது, அது குறித்து கல்வி அமைச்சிடம் முறையிடத் தீர்மானித்துள்ளதாக கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.இது தொடர்பாக கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சிவக்கொழுந்து ஜெயராஜா திங்கள்கிழமை 02.08.2022 அறிக்கையொன்றை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

நாடு இப்பொழுது பொருளாதார நெருக்கடி, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருளகளுக்கான தட்டுப்பாடு போன்ற காரணங்களின் அடிப்படையில் இக்கட்டான சூழ்நிலையில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கிய இருக்கின்றது. இந்நிலையில் எரிபொருள் தட்டுப்பாட்டினால் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலைமை உள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு ஏற்படக்கூடிய சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ளும்முகமாக கல்வியமைச்சினால் 30.07.2022 திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய மூன்று நாள்களைப் பாடசாலைகளை நடத்துமாறு கேட்கப்பட்டிருக்கிறது. அதன்பிரகாரம் மேற்படி திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய மூன்று நாள்களுக்குப் பாடசாலைகள் நடைபெறுமென்றும். ஏனைய புதன், வெள்ளி ஆகிய இரண்டு தினங்களில் நிகழ்நிலை (சூம்) தொழிநுட்பம் வாயிலாகவோ அல்லது விடுமுறைக்காலத்திற்கான கற்றற்செயற்பாட்டினை வழங்கியோ வீட்டில் இருந்த வண்ணம் தொழிற்படலாமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அதிபர்கள் வாரத்தின் 5 தினங்களும் பாடசாலை நடாத்துவதாயின், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் விருப்பத்தைப் பெற்று அதன்பின் வலயக்கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் பாடசாலையை நடத்தலாமென அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதனைக் கருத்திற் கொள்ளாது, வலயக்கல்விப் பணிப்பாளரின் அனுமதியினையும் பெறாது, கிழக்கு மாகாணத்தின் சில பாடசாலைகள் வாரத்தில் 5 நாள்களும் நடாத்தப்படுவதாக எமது சங்கத்திற்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே, இது குறித்து, கல்வியமைச்சிடம் முறையிடத் தீர்மானித்துள்ளோம். காலத்தின் தேவை கருதி எடுக்கப்பட்ட கல்வியமைச்சின் தீர்மானத்தை மீறிச் செயற்படுவது கண்டனத்திற்குரியது என கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் தெரிவிக்கிறது.

# மடு யாத்திரிகர்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்கவும்

## வைத்திய கலாநிதி கதிர்காமநாதன் சுதாகர்

( வாஸ் கூஞ்ஞ)

நாட்டில் மீண்டும் கொவிட் தொற்று நோய் பரவுவதில் மன்னாரும் உள்ளாகியுள்ளதுடன் தற்பொழுது மன்னாரில் ஆரம்பமாக இருக்கின்ற ஆவணி மாத மடு அன்னை பெருவிழாவுக்கு வரும் யாத்திரிகர்கள் வழிபாடுகளின்போது கட்டாயம் கொவிட் கட்டுப்பாடு நடைமுறைகளை கடைப்பிடிப்பதுடன் முகக்கவசம் அணிந்தவர்களாக இருக்க வேண்டும் என மன்னார் மாவட்ட தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு வைத்திய கலாநிதி கதிர்காமநாதன் சுதாகர் இவ்வாறு தெரிவித்தார்.

திங்கட்கிழமை (01.08.2022) மன்னார் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்ற ஆவணி மாதம் நடைபெற இருக்கும் மருதமடு அன்னையின் பெருவிழா தொடர்பான முன்னேற்பாடு கலந்துரையாடல் கூட்டத்தின்போது மடுவில் மேற்கொள்ள வேண்டிய சுகாதார விடயமாக மன்னார் மாவட்ட தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு வைத்திய கலாநிதி கதிர்காமநாதன் சுதாகர் கருத்து தெரிவிக்கையில், நாட்டில் கொவிட் 19 இன் தொற்றின் அலை மீண்டும் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த தாக்கம் தற்பொழுது மன்னாரிலும் எற்பட்டுள்ளது. ஆகவே இந்த நேரத்தில் இந்த தொற்று நோய் பரவாதிருக்க இது தொடர்பான கட்டுப்பாட்டை முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு மன்னாருக்கும் ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இந்த கொவிட் தொற்றானது தற்பொழுது நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அதிகமாக அடையாளம் காணப்பட்டு வருகின்றது. சென்ற மாதம் அதாவது யூலை மாதம் மட்டும் 61 நோயாளர்கள் இந்த மாதம் ஆகஸ்ட் தொடக்கத்திலே 9 கொவிட் தொற்று நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்பொழுது மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு மட்டுமல்ல சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவான மடு , முசலி மற்றும் மன்னார் ஆகிய அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருவதாலும், இலங்கையில் ஏனைய மாவட்டங்களிலும் கொவிட் தொற்றாளர்கள் இனம் காணப்பட்டு வருவதாலும் மன்னாரில் நிலை கொண்டிருக்கும் மருதமடு அன்னையின் பெருவிழாவுக்கு வரும் யாத்திரிகர்களின் பாதுகாப்பு நலன் கருதி இந்த கொவிட் தொற்று பரவாதிருக்க இறுக்கமான நடைமுறைகளை பின்பற்ற வேண்டிய அவசியம் உண்டு என கேட்டுக்கொள்ளப்பட்டதுடன், ஆகவே ஆலய வளாகத்துக்குள் நடமாடுபவர்களும் மத வழிபாடுகளின்போதும் கட்டாயம் யாவரும் முகக்கவசம் அணித்திருக்க வேண்டும் என மன்னார் மாவட்ட தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு வைத்திய கலாநிதி கதிர்காமநாதன் சுதாகர் இவ்வாறு மேலும் தெரிவித்தார்.

# வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் மட்டக்களப்பிற்கு விஜயம்



வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ நேற்று (02) திகதி மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார். குறித்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது அமைச்சர் நளின் பெர்னாண்டோ கள்ளியங்காடு பகுதியில் அமைக்கப்பட்டுவரும் சத்தோச மொத்த விற்பனை நிலையத்தை பார்வையிட்டுள்ளார். கள்ளியங்காடு பகுதியில் அமைக்கப்பட்டுவரும் சத்தோச மொத்த விற்பனை நிலையத்தை பார்வையிட்டதுடன், அதற்கு அருகாமையில் தற்காலிகமாக நிறுவப்பட்டுள்ள சத்தோச விற்பனை நிலையத்தை பார்வையிட்டதுடன், குறித்த சத்தோச விற்பனை நிலயத்தில் காணப்படும் குறைபாடுகளை அதிகாரிகளிடமும், பொருட்கொள்வனவில் ஈடுபட்ட வாடிக்கையாளர்களிடமிருந்தும் கேட்டறிந்துகொண்டதுடன், காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தார். இதன்போது பொருட் கொள்வனவில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவர் தமக்கு பால்மா இங்கு கிடைப்பதில்லையென கூறியதை தொடர்ந்து அமைச்சர் தொலைபேசி வாயிலாக உரிய அதிகாரியை தொடர்பு கொண்டு மாவட்டத்திற்கென இலவசமாக ஒரு தொகுதி பால்மாவை அனுப்பிவைக்குமாறு பணித்ததுடன், சத்தோசயின் விற்பனைக்காகவும் பால்மாவினை அனுப்பிவைக்குமாறும் பணித்திருந்தார்.

அத்தோடு தான் ஜனாதிபதியிடம் கடந்த அமைச்சரவை கூட்டத்தின்போது பொருட்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும், மக்கள் மிகுந்த கஸ்டத்தை எதிர்நோக்கி வருகின்றார்கள் என கூறியிருப்பதாகவும் இதன்போது பொருட் கொள்வனவில் ஈடுபட்டிருந்த மக்களிடம் தெரிவித்திருந்தார். அமைச்சரின் குறித்த கள விஜயத்தின்போது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன், அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் சத்தோச நிறுவனத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட மேலும் பலர் இதன்போது கலந்துகொண்டுள்ளனர்.

# கல்முனை IOC யில் அரசாங்க அறிவுறுத்தலுக்கு அமைய QR Code முறை மூலம் எரிபொருள் விநியோகம்

**பாறுக் ஷிஹான்**

கல்முனை IOC எரிபொருள் நிலையத்தில் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய QR Code திட்டத்தின் ஊடாக வாகனங்களுக்கு இன்று எரிபொருள் விநியோகிக்கப்பட்டன. கல்முனை திலகா எரிபொருள் நிலைய முகாமைத்துவ பணிப்பாளர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைய ஞசு ஊழனந முறை மூலம் முதல் தடவையாக பொதுமக்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டது. இதேவேளை வாகனங்களின் இறுதி இலக்கங்களுக்கு அமைய கடந்த தினங்களாக எரிபொருளை பெற்றுக் கொள்ளாத பொதுமக்களுக்கும் இன்றைய தினம் எரிபொருள் வழங்கப்பட்டன. இதன் போது மோட்டார் சைக்கிள்களுக்கு 4 லீட்டரும் முச்சக்கர வண்டிகளுக்கு 5 லீட்டரும் சொகுசு கார் வாகனங்களுக்கு 20 லீட்டரும் எரிபொருள் வழங்கப்பட்டது. அத்துடன் கரப்பிணிகள், மத தலைவர்கள், பொலிஸார், பொது சுகாதார பரிசோதகர்கள் ,நோய் பிணியாளர்களுக்கும் இடையிடையே முன்னுரிமை வழங்கப்பட்டு எரிபொருள் பெற்றுக்கொடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.




"வேண்டுவார் வினைதீர்க்கும் வேலவன் வீற்றிருக்கும் தாந்தாமலைப் பதியை தானாடிச் சென்றிடுங்கால் தொல்வினைகள் தீர்த்து துயரங்கள் அகன்று இன்பமுடன் வாழ்வார் உலகில்"

## தாந்தாமலை ஸ்ரீ முருகனுக்கு மகோற்சவப் பெருவிழா - 2022

திருக்கொடியேற்றம்
22.07.2022 வெள்ளிக்கிழமை

தீர்த்தோற்சவம்
12.08.2022 வெள்ளிக்கிழமை

விளம்பர அனுசரணையாளர் : முத்துலிங்கம் அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# மண்ணெணெய் விநியோகத்தை பூரணமாக தடைசெய்திருப்பது மீனவ சமூகம் கொதித்தெழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது

**(வாஸ் கூஞ்ஞ)**




கடந்த நான்கு மாதங்களாக மீனவ சமூகம் எரிபொருள் இன்மையால் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகி தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் இவ்வேளையில் மண்ணெணெய் விநியோகத்தை பூரணமாக தடைசெய்திருப்பது மீனவ சமூகம் கொதித்தெழும் நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றனர் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சனாதிபதிக்கு சுட்டிக்காட்டியுள்ளார். வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சனாதிபதிக்கு அவசரமாக அனுப்பி வைத்துள்ள மடலில் தெரிவித்திருப்பதாவது, எரிபொருளான மண்ணெண்ணெய் விநியோகத்தை பூரணமாக தடைசெய்யும் நடவடிக்கையானது வடக்கு கிழக்கில் வாழும் மீனவர்கள் மற்றும் விவசாயிகள் மட்டத்தில் பாரிய போராட்டங்களைத் தூண்டுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு வருகின்றது.

வடக்கு கிழக்கில் வாழும் பெரும்பாலான தமிழ் மக்கள் மீன்பிடி மற்றும் விவசாயத்தை நம்பியே வாழ்கின்றனர். கடந்த நான்கு மாதங்களாக எரிபொருளான மண்ணெண்ணெய் விநியோகம் முற்றாக தடைப்பட்டுள்ளது. ஆனால் இந்த மக்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. மக்களின் வருமானம் பாதிக்கப்படுகிறது. இது இந்த மக்களின் அனைத்து நிலைகளையும் பாதித்திருக்கிறது. எனவே இம்மக்களின் சார்பாக நான் கேட்டுக்கொளவது என்னவென்றால் இம்மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உடனடி நடவடிக்கை எடுத்து அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்க்கையை நடத்த வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சனாதிபதிக்கு அனுப்பியுள்ள மடலில் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

# பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தனின் தந்தை காலமானார்

**பைஷல் இஸ்மாயில் -**



மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தனின் தந்தையும், தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் ஆயுட்கால உறுப்பினரும், கோரளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமான ஆ.சிவநேசதுரை 75வது வயதில் இன்று புதன்கிழமை (03) காலமானார். மட்டக்களப்பு பேத்தாழையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் 7 பிள்ளைகளின் தந்தையாகவும், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிக்கும், பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தனின் வெற்றிக்கும் பக்க பலமாக இருந்துவந்தவரும், கட்சியை ஒரு கட்டுக்கோப்புடன் உருவாக்கி வளர்தெடுத்த பங்கும் இவருக்குண்டு. தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி ரீதியாக கோரளைப்பற்று பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைந்து 2008 ஆம் ஆண்டு முதல் 2012 வரையும் பிரதேச சபை உறுப்பினராக இருந்துகொண்டு பல மக்கள் நலன்சார்ந்த வேலைகளை முன்னெடுத்தவர் ஆவார். இவரின் இழப்பு தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிக்கு பேரிழப்பாகும் என தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

# தூண்டிலில் சிக்கிய பாரிய எடையுள்ள கொடுவா மீன்



**பாறுக் ஷிஹான்**

25 கிலோ பாரிய எடையுளள கொடுவா மீன் சிறிய இயந்திர தூண்டிலில் சிக்கியுள்ளது. இன்று அம்பாறை மாவட்ட காரைதீவு மற்றும் நிந்தவூர் பகுதிகளை இணைக்கும் முகத்துவாரத்து கடற்கரையில் இரு இளைஞர்கள் கடலில் தூண்டில் மூலம் குறித்த மீனை பிடித்து கரைக்கு கொண்டு வந்தனர். சுமார் 18 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய குறித்த மீன் தூண்டிலில் சிக்குண்டு கடலில் அட்டகாசம் காட்டியதுடன் இளைஞர்கள் குறித்த மீனை கடலில் இருந்து கரைக்கு கொண்டு வருவதற்கு பெரும் சிரமங்களை மேற்கொண்டிருந்தனர். அத்துடன் அம்பாறை மாவட்ட கடற்கரையில் பருவ மாற்றம் காரணமாக அதிகளவில் மழை பெய்து வருவதுடன் சில முகத்துவாரங்களும் வெட்டப்பட்டுள்ளன. இதனை தொடர்ந்து பொழுதுபோக்கிற்கான சிலர் தூண்டில் மூலம் அப்பகுதியில் மீன்களை பிடித்து வருவதனை காண முடிகின்றது.

# வந்தாறுமூலை கிழக்கு களுவன்கேணி அருள் மிகு ஸ்ரீ சிவமுத்து மாரியம்மன் ஆலயத்தின் திருச்சடங்கு கதவு திறத்தல்

**க.ருத்திரன்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான வந்தாறுமூலை கிழக்கு களுவன்கேணி அருள் மிகு ஸ்ரீ சிவமுத்து மாரியம்மன் ஆலயத்தின் திருச்சடங்கு கதவு திறத்தல் நிகழ்வுடன் செவ்வாய் கிழமை மாலை வெகு சிறப்பாக நடைபெற்றது. வந்தாறுமூலை தேவபுரம் நாகதம்பிரான் ஆலயத்தில் இருந்து மடை எடுக்கின்ற நிகழ்வு ஆரம்பமாகி இரவு 7 மணியளவில் திருக்கதவு திறத்தல் நிகழ்வு இனிதே நடைபெற்றது. தொடர்ந்து 7 நாட்கள் திருச்சடங்கு நடைபெற்று எதிர்வரும் 8 ஆம் திகதி தீ மிதிப்பு நிகழ்வுடன் திருச்சடங்கு இனிது நிறைவு பெறவுள்ளது.5 ஆம் திகதியன்று பாற்குடபவணியும் விசேட பால் அபிஷேகப் பூசையும் இடம்பெறும். திருச்சடங்கானது ஆலயத்தலைவர் க.மகாலிங்கம் தலைமையில் பிரதமகுரு பூ.சண்முகம் அவர்களின் வழிகாட்டலில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




"தா" என்றால் "இந்தா" என்று வழங்கும்

தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய

வருடாந்த மகோற்சவப் பெருவிழா 2022

திருக்கொடியேற்றம்
22.07.2022 வெள்ளிக்கிழமை

தீர்த்தோற்சவம்
12.08.2022 வெள்ளிக்கிழமை

அனைவரும் வருக! முருகன் திருவருள் பெறுக!

விளம்பர அனுசரணையாளர் : தாந்தியான் வேதநாயகம் (முனைக்காடு)